## EVERWIN MATRIC.HR.SEC.SCHOOL

பருவம் - 2- இயல்-1 **Std : VII**

### செய்யுள் -1 ___ கலங்கரை விளக்கம்

**கடியலூர் உருத்திரங் கண்ணனார்.**

**சொற்பொருள்: புத்தகப் பக்கம் எண்:3**

**I. குறுவினாக்கள்.**

1. மரங்கலங்களைத்துறை நோக்கி அழைப்பது எது?
   கலங்கரை விளக்கம் கடலில் துறை அறியாமல் கலங்கும் மரங்கலங்களைத் தன் துறை நோக்கி அழைக்கிறது.
2. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?
   கலங்கரை விளக்கில் இரவு நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்.

**II. சிறுவினா.**

1. கலங்கரை விளக்கம் பற்றி பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.
   கலங்கரை விளக்கம் பற்றி பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகள்.
   - கலங்கரை விளக்கமானது வானம் கீழே விழாமல் தாங்கி நிற்கும் தூண் போல தோற்றமளிக்கிறது.
   - ஏணி கொண்டு ஏறமுடியாத உயரத்தைக் கொண்டிருக்கிறது.
   - வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாமல் சார்ந்து பூசப்பட்ட விண்ணை முட்டும் மாடத்தை உடையது.
   - இம்மாடத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு, கடலில் துறை அறியாமல் கலங்கும்.
   - மரங்கலங்களைத் தன்துறை நோக்கி அழைக்கிறது.

### செய்யுள் -2 -கவின்மிகு கப்பல்

**மருதன் இளநாகனார்.**

**சொற்பொருள்: புத்தகப் பக்கம் எண்: 6**

I. குறுவினாக்கள்.

1. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?
   நாவாயின் தோற்றம் உலகம் புடை பெயர்ந்தது போன்ற அழகு பொருந்தியது என்று அகநானூறு கூறுகிறது.
2. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணைசெய்கிறது?
   காற்று இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசி, நாவாயை அசைந்துச் செலுத்த நாவாய் ஓட்டிகளுக்குத் துணைசெய்கிறது.

**II. சிறுவினா.**

1. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
   - கடலில் கப்பல் செல்லும் காட்சியை உலகம் புடை பெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது கப்பல்.
   - அது புலால் நாற்றமுடைய அலைவீசும் பெரிய கடலில் நீரைப் பிளந்து கொண்டு செல்லும்.
   - இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் வீசிகின்ற காற்றானது நாவாயை (கப்பலை) அசைத்துச் செலுத்தும்.
   - உயர்ந்த கரையை உடைய துறைமுகத்தில் கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து கப்பல் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான் என்று அகநானூறு விளக்குகிறது.

### உரைநடை 1: தமிழரின் கப்பற்கலை

**I. குறுவினாக்கள்.**

1.தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.
- எடை குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து எடுத்துவிட்டுத் தோணியாகப் பயன்படுத்தினர்.
- உட்பகுதி தோண்டப்பட்டவை என்பதால் அவை தோணிகள் எனப்பட்டன.

2. கப்பல் கட்டும் போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் (அ) பஞ்சு வைப்பதன் நோக்கம் என்ன?
கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைக்கும் என்ற காரணத்தினால் மரப்பலகைகளுக்கு இடையில் தேங்காய் நார், பஞ்சுஆகியவற்றைப் பயன்படுத்தினர்.

3. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது. ஏரா, பருமல், வங்கு, கூம்பு, பாய் மரம், சுக்கான் நங்கூரம் கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும்.

**II. சிறுவினாக்கள்.**

1. சிறிய நீர்நிலைகளையும், கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.
   - தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்சை் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயனபடுத்தினர்.
   - கலம், வங்கம், நாவாய் முதலியவை அளவில் பெரியவை இவற்றைக் கொண்டு தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டனர்
2. பண்டைத்தமிழரின் கப்பல் செலுத்து முறை பற்றி எழுதுக.
   - காற்றின் திசையை அறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.
   - திசைகாட்டும் கருவியைப் பயன்படுத்தி கப்பலைச் செலுத்தினர்.
   - கப்பல் ஓட்டும் மாலுமிகள் சிறந்த வானியல் அறிவையும் பெற்றிருந்தனர்
   - கோள்களின் நிலையை வைத்து புயல், மழை போன்றவை தோன்றும் காலங்களையும், கடல்நீர் பொங்கும் காலத்தையும் அறிந்து கப்பல்களைச் செலுத்தனர்.
3. கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?
   - கப்பல் கட்டுவதற்கு உரிய மரங்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர்.
   - தண்ணீரால் பாதிப்பு அடையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர்.
   - மரத்தின் நிறத்தைக் கொண்டு மரத்தின் தன்மையை அறிந்தனர்.
   - சுழி உள்ள மரங்களைப் பயன்படுத்தாமல் தவித்தனர்.

- மரப்பலகைகளுக்கு இடையில் தேங்காய் நார் மற்றும் பஞ்சுகளைப் பயன்படுத்தியதால் கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தன.

## பருவம் - 2- இயல்-2: செய்யுள் -1
## இன்பத்தமிழ்க் கல்வி-பாரதிதாசன்
## சொற்பொருள்: புத்தகப் பக்கம் எண்:27

**I. குறுவினாக்கள்.**

1. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?
வானமும் நீரோடையும், தாமரை மலர்களும், காடும் வயல்களும் கருமேகங்களும் பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் ஆகும்.

2. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?
தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் வாழ்வில் துன்பங்கள் நீங்கும், நெஞ்சில் தூய்மை உண்டாகும், வீரம் வரும் என்று பாரதிதாசன்குறிப்பிடுகிறார்.

**II. சிறுவினா.**

1. "இன்பத்தமிழ்க் கல்வி " - பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.
   - தமிழ்நாட்டு மக்கள் அறியாமையில் உள்ளனர்
   - அந்த அறியாமையைப் போக்க வேண்டும் என்றால் தமிழ் மொழிக்கல்வி கற்பித்தல் வேண்டும்.
   - அந்நிலை ஏற்பட்டால் வாழ்வில் துன்பங்கள் நீங்கும், நெஞ்சில் தூய்மை உண்டாகும் என்பவையே மையக்கருத்துகள் ஆகும்.

## செய்யுள் -2- அழியாச்செல்வம் - சமணமுனிவர்
## சொற்பொருள்: புத்தகப் பக்கம் எண்: 29

**I. குறுவினா.**

1. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
   - கல்வியைப் பொருள் போல வைத்திருந்தாலும் அது பிறரால் எடுக்க முடியாது.
   - கல்வியைப் பிறர்க்கு வழங்கினாலும் குறையாது.

**II. சிறுவினா:**

1. கல்வி செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
   - கல்வியைப் பொருள் போல வைத்திருந்தாலும் அது பிறரால் கொள்ளப்படாது.
   - ஒருவருக்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது.
   - மிகுந்த சிறப்பினை உடைய அரசாலும் கவர முடியாது.
   - ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகாது இவையே நாலடியார் கூறும் கருத்துகள் ஆகும்.

## உரைநடை 2: வாழ்விக்கும் கல்வி

**I. குறுவினாக்கள்.**

1. மனிதப்பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?
   - மனிதப்பிறவி தனித்தன்மை உடையது பிற உயிரினங்களுக்கு அத்தன்மை இல்லை.
   - மனிதப்பிறவிக்குத்தான் எதிர்காலம் சொல்ல முடியாது. பிற உயிரினங்களுக்கு எதிர்காலம் பற்றி கூற முடியும்.
2. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
   - வள்ளுவர் கல்வி அறிவு இல்லாதவர்கள் விலங்கோடு ஒப்பிடுகிறார்
   - ஏனெனில் விலங்கு நல்ல செயல்களைத் தானாகச் செய்யாது தானாக செயல் பட வேண்டுமானால் கல்வி அறிவு தேவை என்று கூறுகிறார்.
3. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
   - நூல்களை நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும்.
   - நூல்களை ஆழமாக சிந்தித்து பொருள் விளங்கும் வகையில் படித்தல் வேண்டும்.

**II. சிறுவினாக்கள்.**

1. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.
   - உலகில் உள்ள எல்லாச் செல்வமும் அழிந்துவிடும் ஆனால் ஒருவர் கற்ற கல்வி என்றும் அழியாது.
   - கல்வியை மற்றவர்களுக்கு வழங்கினால் குறையாது மாறாக அறிவு வளர்ச்சி பெறும்.
   - ஆகவே "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
     மாடல்ல மற்றை யவை"
     என்று வள்ளுவர் கூறுகிறார்.
2. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?
   - கல்வி ஓர் ஒளிவிளக்கு, விளக்கு இருக்கும் இடத்தை ஒளிமயமாக ஆக்கும்.
   - அதுபோல ஒருவன் கற்றுவிட்டால் தாம் கற்ற கல்வியைப் பலருக்கும் அளிக்க வேண்டும்.
   - விளக்கை போல் ஒளிதருவது கல்வி என்று திருக்குறளார் கல்வியை விளக்கோடு ஒப்பிடுகிறார்.

## இயல்-3: செய்யுள் -1
## ஒரு வேண்டுகோள் - தேனரசன்
## சொற்பொருள்: புத்தகப் பக்கம் எண்:49

**I. குறுவினாக்கள்.**

1. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?
   தாய்மையின் ஓவியத்தில் முகத்தில் அன்பும் பாசமும் நிறைந்திருக்க வேண்டியவை ஆகும்.
2. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?
   மானுடப் பண்பு இணையும் பொழுது ஒரு கலை உயிர்ப்புடையதாக அமையும்.

**II. சிறுவினா.**

1. சிற்பங்களும் ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

- பாறை உடைப்பரின் சிலையைச் செதுக்கினால் அதில் வியர்வை நாற்றம் வீச வேண்டும்.
- உழவரின் உருவத்தை வார்ப்பதற்காக இருந்தால் அதில் ஈரமண்ணின் மணம் வீச வேண்டும்
- தாயின் மகிழ்ச்சியான உருவத்தை ஓவியமாக வரைந்தால், அவரின் முகத்தில் அன்பும் பாசமும் நிறைந்திருக்க வேண்டும்
- சிறு குழந்தையின் சித்திரத்தைத் தீட்டினால் அதன் உடலில் பால் மணம் கமழ வேண்டும். என்று சிற்பங்களும் ஓவியங்களும் அமைய வேண்டிய தன்மை பற்றி கவிஞர் கூறுகிறார்.

**செய்யுள் -2**

**கீரைப்பாத்தியும் குதிரையும் - காளமேகப்புலவர்**

**I. சொற்பொருள்: புத்தகப் பக்கம் எண் : 51**

**II. சிறுவினா.**

1. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

- கீரைப்பாத்தியில் மண் கட்டிகளை அடித்து உடைக்கப்படும். அதே போல் குதிரை வண்டியில் கட்டி அடித்து ஓட்டப்படும.
- வாய்க்காலில் மடை மாறித் தண்ணீர் பாயும் அதே போல் குதிரை கால் மாறி மாறிப் பாய்ந்து செல்லும் தன்மையது.
- நீர் கடைமடையின் இறுதிவரை சென்று திரும்பிவரும் அதுபோலவே குதிரையும் போக வேண்டிய இடம் முழுவதும் சென்று திரும்பிவரும் எனவே கீரைப்பாத்தியும் குதிரையும் ஒத்த தன்மை உடையவை ஆகும்.

**இயல்-3 உரைநடை 3: பேசும் ஓவியங்கள்**

**I. குறுவினாக்கள்.**

1. ஓவியங்களின் வகைகள் யாவை?

குகை ஓவியம், சுவர் ஓவியம், துணி ஓவியம், ஓலைச்சுவடி ஓவியம், செப்பேட்டு ஓவியம், தந்த ஓவியம், கண்ணாடி ஓவியம், தாள் ஓவியம், ஆகியவை ஓவியங்களின் வகைகள் ஆகும்.

2. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?

- பழங்கால மனிதனின் வாழ்க்கை நிலை பற்றி அறியமுடிகிறது
- பழங்கால செய்திகளை அறிய முடிகிறது.

3. தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?

தாள் ஓவியங்கள் கரிக்கோல், நீர் வண்ணம். எண்ணெய் வண்ணம், ஆகியவற்றைப் பயன்படுத்தி வரைவர்.

4. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக்க கூறுக.

அரண்மனைகள், மண்டங்கள், கோவில்கள் போன்றவற்றின் சுவர்களில் ஓவியங்கள் காணப்படும்.

5. செப்பேடுகளில் காணப்படும் காட்சிகள் யாவை?

நீர்நிலைகள், செடிகொடிகள், பறவைகள், விலங்குகள், ஆகியவை செப்பேடுகளில் காணப்படும் காட்சிகள் ஆகும்.

**II. சிறுவினாக்கள்.**

1. கேலிச்சித்திரம் எள்றால் என்ன?

- அரசியல் கருத்துக்களை எளிமையாக விளக்குவதற்கு இது பயன்படுகிறது
- இந்தியா இதழில் பாரதியார் தான் முதன்முதலில் இத்தகைய சித்திரங்களை அறிமுகப்படுத்தினார்
- மனித உருவங்களை விந்தையான தோற்றங்களில் நகைச்சுவை தோன்றும்படி வரைவதையே கேலிச்சித்திரம் என்பர்

2. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

- ஓலைச்சுவடிகள் மீது எழுத்தாணிகளைக் கொண்டு கோட்டோவியமாகவும் வண்ணப்பூச்சு ஓவியமாகவும் வரைந்தனர்.
- பெரும்பாலும் இதிகாசம், புராணக் காட்சிகளே வரையப்பட்டன.
- தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் இத்தகைய ஓலைச்சுவடி ஓவியங்கள் உள்ளன.

**இயல்-3: செய்யுள்-3**

**திருக்குறள்**

**சொற்பொருள்: புத்தகப் பக்கம் எண்: 70, 71**

**I. குறுவினாக்கள்.**

1. நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும் எப்போது?

- நாம் ஒருவருடைய பண்பை அறிந்து நன்மை, செய்ய வேண்டும்.
- அவ்வாறு அறிந்து செய்யாத நன்மை தீமையை உண்டாக்கும்.

2. தீமை உண்டாக்கும் இரண்டு செயல்களை எழுதுக.

- செய்யத்தகாத செயல்களைச் செய்வதும்.
- செய்யத்தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதலும் தீமை உண்டாகும்.

3. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

துன்பம் வந்த போது வருந்திக் கலங்காதவர், அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்குபவர் ஆவார்.

**தமிழ் முதல் தாள் (பொது)**

**ஏற்ற வினா அமைக்க.**

1. தமிழர்கள் முற்காலத்திலேயே கப்பல் கட்டும் கலையை அறிந்திருந்தனர்.

விடை: தமிழர்கள் முற்காலத்தில் எக்கலையை அறிந்திருந்தனர்?

**பொதுக்கட்டுரை-1**

**தலைப்பு: சூரிய வெப்ப மின்சாரம்**

**குறிப்புச்சட்டம்**

- முன்னுரை
- பயன்கள்
- மின்சாரம்
- சூரிய சக்தி
- முடிவுரை

**முன்னுரை:**
இளங்கோவடிகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்"என்று சூரியனைப் போற்றியுள்ளார். இந்த உலகில் தோன்றிய உயிரினங்களும், தாவர இனங்களும் வாழ்வது சூரிய சக்தியால் தான் எனவே இச்சக்தி இன்றியமையாத ஒன்றாகும்.

**பயன்கள்:**
தாவரங்கள் தங்களுக்கு வேண்டிய உணவைப் பெறுவகதற்குச் சூரிய சக்தி மிகத் தேவையான ஒன்றாகும். நீர் நிலைகளில் உள்ள நீரை ஆவியாக்கி, மேகமாய் வானில் உருப்பெறச் செய்து மழையைக் கொடுப்பது சூரிய சக்திதான்.

**மின்சாரம்:**
நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் மின்சாரம் தேவைப்படுகிறது. நீர்மின் நிலையங்களிலும் அணுமின் நிலையங்களிலும் செய்யப்படும் மின்சாரம் போதுமானதாக இல்லை. எனவே சூரிய சக்தியிலிருந்து மின்சாரம் எடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சூரிய சக்தி:** சூரிய சக்தியிலிருந்து எடுக்கப்படும் மின்சாரத்திதனால் விளக்கு எரிக்கலாம். ஒலிபெருக்கிக் கருவிகளை இயக்கலாம். மின் அடுப்புகளுக்குப் பயன்படுத்தலாம். சூரிய சக்தியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் கருவிகள் இப்போது விற்கப்படுகின்றன.

**முடிவுரை:**
சூரிய சக்தியின் பயனை நம் முன்னோர் அறிந்திருந்தனர். சூரிய சக்தியிலிருந்து மின்னாற்றல் பெறுவதற்காகும் செலவு மிகவும் குறைவேயாகும் எனவே சூரிய சக்தியைப் பயன்படுத்திச் சிக்கனமாய் வாழ்வோம்.

## பொதுக்கட்டுரை-2
## தலைப்பு: ஊக்கம் உடைமை
### குறிப்புச்சட்டம்

- முன்னுரை
- ஊக்கம் தந்த உயர்வு
- ஊக்கத்தின் புகழ்
- ஊக்கத்தின் பயன்கள்
- முடிவுரை

**முன்னுரை:**

"உள்ள முடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்"

என்பது வான்மறை தந்த வாசகம். உள்ளம் என்பது ஊக்கத்தைக்குறிக்கும். ஊக்கம் என்பது ஒரு செயலை மனிதன் செய்ய முற்படும் உள்ளத்தில் தொடர்ந்து ஏற்படும் எழுச்சி.

**ஊக்கம் தந்த உயர்வு:**
"ஔவையார் ஊக்கமது கைவிடல்" எனக் கூறியதற்குக் காரணம் ஊக்கம் இருந்தால் தான் செயல்படும் எண்ணம் தோன்றும், பிறகு முயற்சியும் உழைப்பும் உண்டாகும். பின்னரே மனிதகுலம் உயர்வை எட்டும்.

**ஊக்கத்தின் புகழ்:**
ஆறுமுறை தோற்ற இராபர்ட் புரூசு சிலந்திக்கூடு கட்டி முடித்ததைக் கண்டே ஏழாவது முறையில் வெற்றியை எட்டினார். கஜினி முகம்மது பதினேழு முறை தோற்றுப் பதினெட்டாவது முறை வெற்றி பெற்றது ஊக்கத்தால் தானே ! ஆக்கம், செல்வம் போன்றவை ஊக்கத்தின் வழியே அடைய முடியும்.

**ஊக்கத்தின் பயன்கள்:**
ஊக்கம்தான் தூக்கத்தைக் குறைக்கும், உற்சாகத்தைக் கொடுக்கும் செய்தித்தாள் விற்ற எடிசன் நாளெல்லாம் உலகை ஒளியாக்கியது ஊக்கத்தால், உழைப்பால், ஊக்கம் இல்லை என்றால், இன்றைய உலகம் இன்னும் இருள் சூழ்ந்து விடும். ஊக்கம்தான் உயர்வை அரும்பாக்கும் வாழ்வைக் கரும்பாக்கும், மன உறுதியை இரும்பாக்கும்.

**முடிவுரை:**
மாணவர்களாகிய நாம் படிப்பிலும் பிற செயல்களைக் கற்றுக் கொள்வதிலும் ஊக்கத்துடன் செயல்பட வேண்டும்.

## இயல்-1துணைப்பாடம்-1
## ஆழ்கடலின் அடியில்

1. "ஆழ்கடலின் அடியில்" என்னும் கதையைச் சுருக்கி எழுதுக.

### குறிப்புச்சட்டம்

- முன்னுரை
- நீர்முழ்கி கப்பலைக் கண்டறிதல்
- சிறைபிடித்தல்
- ஆழ்கடலின் அடியில்
- முடிவுரை

**முன்னுரை:** என் பெயர் பியரி. நான் ஒரு விலங்கியல் பேராசிரியர். கடலில் செல்லும் கப்பல்களை 1886 ஆம் ஆண்டு ஒரு விந்தையான விலங்கு ஒன்று தாக்குகிறது என்னும் செய்தியை அறிந்து, நானும் ∴ ப்ராக்ட், நெட், கான்சீல் ஆகியோரும் அந்த விலங்கை அழிக்க போர்க்கப்பலில் கடலுக்குச் சென்றோம்.

**நீர்முழ்கி கப்பல்:**
கப்பலில் மிகுந்த போராட்டங்களுக்குப் பிறகு, நாங்கள் தேடிவந்த "விலங்கு" உண்மையில் விலங்கு அல்ல அது ஒரு "நீர்முழ்கிக்கப்பல்" என்ற செய்தியை அறிந்து வியப்படைந்தோம்.

**சிறைபிடித்தல்:** நீர்முழ்கி கப்பல் நெமோ என்ற தலைவனால் நாங்கள் சிறைப்படிக்கப்பட்டோம். இங்கிருந்து எங்களால் தப்பித்துச் செல்லவும் முடியவில்லை. அங்கு கப்பல் எந்தக் கடலில், எவ்வளவு ஆழத்தில் மிதக்கிறது, எந்தப் பகுதியில் இருந்து என்பதை அறிந்து கொள்ள பெரிய திரை இருந்தது. பல நாட்கள் பயணத்திற்குப் பிறகு, இந்தியாவுக்கும், இலங்கைக்கும் அருகில் முத்துக் குளிக்கும் தொழில் நடைபெற்று வந்ததைப் பார்த்தோம். முழுநிலவு நாளில் கடலின் நீர் மட்டம் உயர்ந்து கப்பல் மிதக்கத் தொடங்கிய போது மேற்கண்ட நிகழ்வை அறிந்தோம்.

**ஆழ்கடலில் அடியில்:** இங்கிலாந்துக்கும், ஸ்பெயினுக்கும் இடையே நடைபெற்ற போரின் போது மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களைப் பார்த்தோம். எரிமலையைக் கண்டு வியந்தோம். பூகம்பத்தால் மூழ்கிப்போன அட்லாண்டிஸ் என்னும் நகரத்தின் இடிபாடுகளைக் கண்டோம்.

**முடிவுரை:** இப்படியே எங்கள் பயணம் தொடர்ந்தது. அப்பொழுது "நாட்டிலஸ்" பெரும் கடல் சுழலுக்குள் சிக்கிக் கொண்டது. கப்பலுடன் இணைந்திருந்த எங்கள் படகும் சூழலில் சிக்கிக் கொண்டது. அதன் மேல் நின்று கொண்டிருந்த

நாங்கள் கடலுக்குள் தூக்கி வீசப்பட்டோம். கண்விழித்தபோது, நார்வே நாட்டின் கடற்கரையில் மீனவர் குடிசையில் இருந்தோம்.

**துணைப்பாடம்-2- பள்ளியின் மறுதிறப்பு**

1. மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

**குறிப்புச்சட்டம்**

- முன்னுரை
- மதிவாணனின் கனவுகள்
- படிப்பின் அவசியம்
- முதியவரின் கேள்வி
- முடிவுரை

**முன்னுரை:** மதிவாணனும் கவினும் நண்பர்கள். இருவரும் கோடை விடுமுறையில் பின்னலாடை நிறுவனத்திலட வேலை செய்தார்கள். அதில் கிடைத்த சம்பளத்தின் மூலம், தங்களது அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றினார்கள்.

**மதிவாணனின் கனவுகள்:**

- நண்பன் கவின் பின்னலாடை நிறுவனத்திற்கு வேலை செய்ய அழைத்தான். "புதிய உடைகள், குறிப்பேடுகள் வாங்கப் பணம் சம்பாதித்திடுவாய் என்றான். மதிவாணன் குழப்பத்துடன் யோசித்தான்.
- தொழிலாளியாய் இருப்பது கேவலம் இல்லை. ஆனால், படிக்கிற வயதில் வேலை தேவையா? மருத்துவர், பொறியாளர், வெளிநாட்டு வேலை  என்று அவனுக்குள்ளும் கனவுகள் இருந்தன.

**படிப்பின் அவசியம்:** கல்வி அறிவு முதன்மையானது ஒரு பட்டமாவது வாங்க வேண்டும். என்று கூறும் விளம்பரப்பலகை கண்ணில் பட்டது. அதில் அம்பேத்காரும் அப்துல் கலாமும் கண்ணில் பட்டனர். "இவர்களைப் போல் உயரவேண்டுமென்றால் படிப்பு வேண்டும். படிப்பில்லாமல் உயர முடியுமா? படிப்பு அடிப்படைத் தேவை. பள்ளிக்குப் போகவில்லை என்று சொன்னாலும் அப்பா, சரி என்று சொல்வார். இந்தக் குறைந்த சம்பளத்திற்காகப் படிப்பதைத் தொலைப்பதா? எனச் சிந்தித்தான் மதிவாணன்.

**முதியவரின் கேள்வி:** மதிவாணன் பேருந்துக்காகக் காத்துக் கொண்டிருந்த நேரத்தில் முதியவர் ஒருவர் இது நல்லூர் போகுமா? என்றார். அங்கிருந்த சிறுவர்களில் ஒருவன், பேருந்து முகப்பைக் கூர்ந்து கவனித்தான். எதுவும் பேசாமல் புன்முறுவல் காட்டினான். "என்னப்பா! போகுமா? என்றார்? முதியவர். " யாருக்குத் தெரியும்? எங்களுக்குப் படிக்கத் தெரியாதே" என்றான். சிறுவர்களாய் இருக்கிறீர்கள், இதைக் கூடக் படித்துச் சொல்லத் தெரியாதா"? என்றார்.

**முடிவுரை:** இதைக் கவனித்துக் கொண்டிருந்த மதிவாணன் இந்தப் பேருந்து நல்லூர் போகாது. நல்லூர் பேருந்து வந்தா சொல்கிறேன்" என்றான். முதியவருக்குப் படிப்பு இல்லை. இந்த வயதிலும் அவமானப்படுகிறார். கல்வி அறிவு இல்லையென்றால் நானும் இப்படிதான் அவமானப்பட வேண்டும். நல்ல படிப்புதான் சிறந்த மனிதனாக்கும் என்ற எண்ணம் எழுந்தது. எனவே அவன் மீண்டும் பள்ளிக்குச் சென்றான்.

**இயல்-3 : துணைப்பாடம்-3 - தமிழ் ஒளிர் இடங்கள்**

நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாய் இருந்தால், சுற்றுலாக் கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

- முன்னுரை
- தஞ்சாவூரின் சிறப்பு
- சென்னை நூலகமும், வள்ளுவர் கோட்டமும்.
- திருவள்ளுவர் சிலை - கன்னியாகுமரி
- முடிவுரை

**முன்னுரை:** நான் சுற்றுலா வழிகாட்டியாய் இருந்தால், தஞ்சாவூர், சென்னை, மதுரை, கன்னியாகுமரி ஆகிய நகரங்களைச் சுற்றிக் காண்பித்து, அந்த நகரங்களின் சிறப்புகளையும், பெருமைகளையும் விளக்கிக் கூறுவேன்.

**தஞ்சாவூரின் சிறப்பு :** முதலில் தஞ்சாவூரின் சிறப்புகளைக் கூறுகிறேன்.

- தஞ்சை நன்செய் நிலம் காவிரி ஆறு பாயும் பகுதி
- கலை இலக்கியங்களின் ஊற்றுக் கண்ணாய் இருக்கிறது.
- இங்குள்ள "சரசுவதி மகால் நூலகம்" அறிவை வளர்க்கிறது
- இங்குள்ள "தமிழ் பல்கலைக்கழகத்தில்" தமிழின் ஆராய்ச்சி இங்கு நடைபெறுகிறது.
- தமிழ் குறித்த ஆராய்ச்சிக்காக உலகின் பல்வேறு பகுதியிலிருந்தும் ஆய்வாளர்கள் இப்பல்கலை கழகத்திற்கு வருகின்றனர்.

**சென்னை மாநகரம் :** அடுத்து சென்னை நகரத்தின் சிறப்புகள் : இந்நகரத்தில் உ.வே.சா நூலகம் சிறப்பு வாய்ந்தது.

- தமிழ்த் தாத்தா என்ற சிறப்புப் பெயர் பெற்ற "உ.வே.சா" வின் ஏட்டுச் சேகரங்களோடு இந்நூலகம் அமைந்துள்ளது. அவர் பதிப்பித்த நூல்கள் இங்கு விற்பனைக்குக் கிடைக்கின்றன.
- அடுத்து கன்னிமாரா நூலகம் இது இந்தியாவின் பெருமை மிகு தேசிய நூலகம்.
- அடுத்து வள்ளுவர் கோட்டம். 1976 இல் இக்கோட்டத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றன.
- இதன் தேர்வடிவமைப்பு அனைவரின் கவனத்தை ஈர்க்கும். தேரின் அடிப்பகுதி இருபத்தைந்து அடி நீளமும், அடிப்பகுதி இருபத்தைந்து அடி அகலமும் உடையது. தேரின் மொத்த உயரம் 128 அடி ஆகும்.

**கன்னியாகுமரி :**

- இந்தியாவின் தெற்கு எல்லையாகிய கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது.
- இச்சிலை விவேகானந்தர் பாறைக்கு அருகில் உள்ளது. இச்சிலையின் உயரம் மொத்தம் 133 அடி திருக்குறளின் மொத்த அதிகாரங்களைக் குறிக்கிறது.
- பீடத்தின் உட்புறத்தில் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் இங்கு நாள்தோறும் வந்து செல்கின்றனர்.
- தமிழரின், தமிழ்மொழியின் பெருமைமிகு அடையாளமாக இச்சிலை உயர்ந்து நிற்கிறது.

**முடிவுரை:** அடுத்து மதுரை. இது தமிழ்நாட்டின் மிக அழகான நகரம்.

- மதுரை மாநகரின் தல்லாகுளம் பகுதியில் காந்தி அருங்காட்சியகம் அருகில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது.
- இது சுமார் எண்பத்தேழு ஆயிரம் சதுர அடி பரப்பளவில் மனத்தைக் கவரும் வகையில் கட்டப்பட்டுள்ளது.
  மேற்கண்ட இடங்கள் அனைத்தும் அனைவரும் பார்க்க வேண்டிய இடமாகும்.